# நமது தினகனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 293 | 4 Pages | 27.5.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 293 | 4 பக்கங்கள் | 27.5.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## உலகில் மிக இளம் வயதில் ஓவியரான 1 வயது சிறுவன்



கானா, மே. 27

கானா நாட்டை சேர்ந்த ஏஸ்லியாம் நானா சாம் அன்க்ரா என்ற சிறுவன் உலகின் இளம் வயது ஓவியராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். 1 வருடமும், 152 நாட்களும் ஆன வயதில் அவர் பல ஓவியங்கள் வரைந்துள்ளார். அவற்றில் 9 ஓவியங்கள் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து சிறுவனின் தாயார் சான் டெல்லி கூறுகையில், ஓவியங்கள் வரைவதில் ஏஸ் லியாமுக்கு இருந்த ஆர்வம் அவர் 6 மாத குழந்தையாக இருந்த போதே வெளிப்பட்டது. அவன் நடக்க கற்றுக்கொண்டிருக்கும் போது நான் வேலையில் பிசியாக இருந்தேன். எனவே குழந்தையையும் பிசியாக வைத்திருக்கும் விதமாக கேன் வாஷ் பேப்பரை தரையில் விரித்து அதில் சிறிது பெயிண்டை ஊற்றினேன். ஏஸ் லியாம் அந்த கேன் வாஷ் பேப்பர் முழுவதும் பெயிண்டை பூசியது மூலம் தனது முதல் ஓவியத்தை வரைந்தான். அதன் பிறகு ஓவியம் வரைவது அவனுக்கு பிடித்த ஒன்றாக மாறியது. தொடர்ந்து பல ஓவியங்கள் வரைந்தான்.

சமீபத்தில் ஏஸ் லியாம் வரைந்த ஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. அதில் 10 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டதில் 9 ஓவியங்கள் விற்றுத்தீர்ந்தது என்றார்.

..........................................

## உணவை ருசிக்க யாரும் வராததால் கிடைத்த புகழ்





ஆஸ்திரேலியா, மே.27

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஒரு உணவு திருவிழா நடந்தது. அங்கு இந்தியாவை பூர்வீகமாக கொண்ட சமையல் கலைஞரான 67 வயது பாதம் வியாஸ் ஒரு அரங்கில், தனது உணவுகளை சமைத்து காட்சிப்படுத்தியிருந்தார். ஆனால் அவரது ஸ்டாலுக்கு பார்வையாளர்கள் யாரும் வரவில்லை.

இதையடுத்து "எங்கள் அன்பிற்குரிய தலைமை செப் சிட்னி மக்களுக்கு உணவு தயாரித்தார், ஆனால் யாரும் வரவில்லை" என்று உணவக குழு இன்ஸ்டாகிராமில் வீடியோ பதிவு செய்து வெளியிட்டது. அந்த வீடியோ 4.71 கோடி பேரின் பார்வைகளைப் பெற்று வைரலானது. இதனால் சமையல் கலைஞர் பாதம் வியாஸ் உலகப் புகழ் பெற்றார். அவரது உணவுகளைப் பற்றிய விவாதமும், இந்திய உணவு தயாரிப்பு பற்றிய கருத்துகளும் அதிகம் பகிரப்பட்டன.

..........................................

## ரஃபா நகர் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்: இஸ்ரேலுக்கு ஐ.நா. நீதிமன்றம் உத்தரவு



காசா, மே. 27

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இந்த தாக்குதலை இனப்படுகொலை என அறிவிக்க வேண்டும் என தென் ஆப்பிரிக்கா ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. ஆனால் ஹமாஸ்க்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகிறோம். இனப்படுகொலை நடைபெறவில்லை என இஸ்ரேல் மறுப்பு தெரிவித்தது.

தற்போது பாலஸ்தீன மக்கள் அதிகமாக வசித்து வரும் ரஃபா நகர் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அதிக அளவில் மக்கள் உயிரிழக்க வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது. ஏற்கனவே 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் காசாவில் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் ரஃபா மீதான ராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ளது. இருந்தபோதிலும் இஸ்ரேல் இந்த உத்தரவை பின்பற்ற வாய்ப்பில்லை என கூறப்படுகிறது. நீதிமன்ற உத்தரவை பின்பற்றவில்லை என்றால், உலக நாடுகளால் தனித்து விடப்படும் அபாயம் ஏற்படும்.

ஆனால் காசா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும். அதாவது போர் நிறுத்தத்தை நீதிமன்றம் வலியுறுத்தவில்லை.

சமீபத்தில் மூன்று ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக தெரிவித்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இதில் 1200 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் பிணைக்கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர். இதனால் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக காசா மீது தாக்குதல் நடத்த தொடங்கியது. இந்த தாக்குதலில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஜெயலலிதாவை இந்துத்துவா தலைவர் என்பதா? அண்ணாமலைக்கு சசிகலா கண்டனம்





சென்னை, மே. 27

சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

புரட்சித்தலைவி அம்மாவை இந்துத்துவா தலைவர் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குறிப்பிடுவது அவருடைய அறியாமையை புரட்சித்தலைவி அம்மாவை பற்றி தவறான புரிதலைதான் வெளிப்படுத்துகிறது. புரட்சித்தலைவி சாதி மத பேதங்களை கடந்து அனைத்து தரப்பினராலும் மதித்து போற்றக்கூடிய ஒரு மாபெரும் தலைவியாக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டியவர்.

"மக்களால் நான் மக்களுக்காகவே நான்" என்று தன் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களின் நலனுக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு சிறந்த மக்கள் தலைவர்.

பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோரின் வழியில் ஒரு உண்மையான திராவிட தலைவராக தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்து காட்டியவர். இந்து, இஸ்லாமியர், கிறிஸ்துவர் என அனைத்து சமூகத்தினரும் சொந்தம் கொண்டாடிய ஒரே ஒப்பற்ற தலைவி புரட்சித்தலைவி அம்மா தான் என்பது நாடறிந்த உண்மை.

"அம்மா என்றால் அன்பு" என்ற தாய்மைக்கு இலக்கணமாக நம்மோடு வாழ்ந்து மறைந்தவர் அம்மா. புரட்சித்தலைவரை போன்று, புரட்சித்தலைவி அம்மாவும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் இன்றைக்கும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்.

அரசியல் எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய ஆளுமைதான் அம்மா.

அவருக்கு தெய்வ நம்பிக்கை இருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அதே சமயம் என்றைக்கும் மத நம்பிக்கை கிடையாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு மக்கள் தலைவரை எந்தவித குறுகிய வட்டத்திற்குள்ளும் யாராலும் அடைத்து விட முடியாது என்பதை மட்டும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விடுதியில் தங்கி படித்த 9 வயது சிறுவன் கொலை சக மாணவன் கைது

மதுரை, மே. 27

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள கத்தப்பட்டி சுங்கச்சாவடி பகுதியில் தனியார் பவுண்டேசன் சார்பில் அரபி பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு பீகார் மாநிலத்தை சேர்ந்த 13 மாணவர்கள் தங்கி படித்து வருகிறார்கள். சம்பவத்தன்று அரபி பள்ளியில் படிக்கும் ஷாநவாஸ் (வயது 9) என்ற சிறுவனுக்கும், அவருடன் படிக்கும் 13 வயது மாணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதில் ஆத்திரம் அடைந்த அந்த மாணவன் அங்கு காய்கறி வெட்ட வைத்திருந்த கத்தியை எடுத்து சிறுவன் ஷாநவாசை சரமாரியாக குத்தினான்.

இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த ஷாநவாஸ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தான். பதட்டத்தில் கொலை செய்ததை உணர்ந்த 13 வயதுடைய மாணவன் சிறுவனின் உடலை யாருக்கும் தெரியாமல் மறைக்க முயற்சி செய்தான். அதன்படிஅருகில் உள்ள கழிவுநீர் தொட்டியில் ஷாநவாஸ் உடலை போட்டு மறைத்து விட்டு எதுவும் நடக்காதது போல் மீண்டும் பள்ளிக்கு வந்து விட்டான். இதற்கிடையில் சிறுவன் ஷாநவாஸ் நீண்ட நேரமாகியும் விடுதிக்கு திரும்பாததால் நிர்வாகத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் பல இடங்களில் தேடி பார்த்தனர். ஆனால் கிடைக்கவில்லை. இதுகுறித்து பள்ளி நிர்வாகம் சார்பில் மேலூர் போலீசில் புகார் செய்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விடுதியில் தங்கி இருந்த மற்ற மாணவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்போது 13 வயது மாணவனின் பேச்சு முன்னுக்குப்பின் முரணாக இருந்தது. தொடர்ந்து நடந்த விசாரணையில் ஷாநவாசை கொலை செய்து கழிவுநீர் தொட்டியில் மறைத்து வைத்ததை ஒப்புக்கொண்டான். சிறுவன் ஷாநவாஸ், தனது தாயை தவறாக பேசியதால் கொலைசெய்ததாகஅழுதுகொண்டே தெரிவித்தான். மேற்கண்ட தகவல் போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீசார் கழிவுநீர் தொட்டியில் கிடந்த ஷாநவாஸ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். 9 வயது சிறுவனை சக மாணவன் கொலை செய்திருப்பது அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# 'பா.ஜ.க. தலைவர்களின் சாதனைகளை அண்ணாமலை பேச வேண்டும்' ஆர்.பி.உதயகுமார்



சென்னை,மே.27

முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், மதுரை அலங்காநல்லூரில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"நினைத்தால் புகழ்வதும், நினைத்தால் இகழ்வதும் சிலருக்கு கைவந்த கலையாக இருக்கலாம். ஆனால் முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் கொள்கைகளை காப்பதற்கு கோடான கோடி தொண்டர்கள் இருக்கும்போது, அண்ணாமலையின் தேவையும், தயவும் அ.தி.மு.க.விற்கு எப்போதும் தேவையில்லை.

அண்ணாமலை வேண்டுமானால் அ.தி.மு.க.வின் உறுப்பினராக சேர்ந்து ஜெயலலிதாவின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லட்டும். பா.ஜ.க.வின் தலைவர்களான வாஜ்பாய், அத்வானி, சாவர்க்கர் போன்றவர்களின்சாதனைகளைப் பற்றி அண்ணாமலை பேச வேண்டும். அந்த கொள்கைகளை வைத்து மக்களை கவர வேண்டும்.

ஆனால் அதை விடுத்து, தாய் தமிழகத்திற்காக தன்னையே அர்ப்பணித்து, தன் வாழ்நாளெல்லாம் தமிழர்களுக்காக உழைத்து, இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிய ஜெயலலிதாவின் புகழைப் பற்றி அண்ணாமலை கூறுவதில் எங்களுக்கு எந்த தயக்கமும் இல்லை. ஆனால் அவர் சொல்வதில் உள்நோக்கம் இருக்கிறது, பாராட்டுவதில் கூட அரசியல் நோக்கம் இருக்கும்போது, அதை தமிழக மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?"

இவ்வாறு ஆர்.பி.உதயகுமார் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் இல்லம் தேடிக் கல்வி மைய ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஆலோசனைக் கூட்டம்



புதுக்கோட்டை மே 27

புதுக்கோட்டை மாவட்டத்தில் இல்லம் தேடி கல்வி மைய ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா தலைமையில் ராணியர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறைமாவட்ட உதவித் திட்ட அலுவலர் (தொடக்க கல்வி) கோவிந்தன் ராணியர் பெண்கள்மேல்நிலைப்பள்ளிதலைமை ஆசிரியர்தமிழரசி, உதவி தலைமை ஆசிரியர் ஆதி சங்கர நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா அவர்கள் பேசும்பொழுதுஆதார் சரிபார்ப்பு பணி,காலணி அளவீட்டுப் பணி, மாதிரி பள்ளி தூதுவர் பணி, தற்போது நடைபெற்று வரும் பள்ளி மாணவர்களுக்கான ஆதார் புதுப்பிப்பு மற்றும் புதிய ஆதார் எடுக்கும் பணி ஆகியவற்றில் இல்லம் தேடி கல்வி மாவட்ட, வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின் பணி மிகவும் சிறப்பானது. அதேபோன்று இன்னும் எதிர்வரும் காலங்களிலும் நிறைய பணிகள் வர வாய்ப்புள்ளது அதையும் சிறப்பாக செய்து முடிக்க கேட்டுக்கொள்கிறேன். வருடத்தில் நடைபெற்ற இல்லம் தேடிக் கல்வி பணியில் கற்றல், கற்பித்தல் பணிகள் குறித்தும் மாணவர் வருகை, மாணவர்களுடைய கற்றல் திறன் தன்னார்வலர்கள் தினசரி எடுக்கும் வகுப்புகள் இல்லம் தேடிக் கல்வி செயல்பாடுகளை தன்னார்வலர்கள் செயலில் பதிவேற்றம் உள்ளிட்டவை ஆய்வு செய்தார். மேலும் வரும் கல்வியாண்டில் இல்லம் தேடி கல்வி அமைத்து சிறப்பாக செயல்படுத்த வேண்டும் எனும் அறிவுரை வழங்கினார். இந்நிகழ்வினை இல்லம் தேடி கல்வி மைய புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கலையரசன் ஒருங்கிணைத்தார்.. இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்கள் ரகமதுல்லா, வீரமணி, கணேசன், அன்பு துரை, சேர்மன் துரை, கண்ணன், செந்தில், செல்வராஜ், இராமநாதன், சவரிராஜ், தேவராஜன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மதுரை செய்திமக்கள் தொடர்பு துறை அலுவலக உதவியாளர் வெங்கடேசன் மாரடைப்பு காரணமாக may 25ம் தேதி இரவு 7.00 மணியளவில் மரணம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.

**வருத்தமுடன் மாநில நிர்வாகிகள் & தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்கம்**

# 17 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய கட்டிட தொழிலாளி கைது

திருப்பூர், மே. 27

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள தேர்ப்பட்டி பகுதியை சேர்ந்தவர் சிவக்குமார் என்கிற சிவா (வயது 38). கட்டிட தொழிலாளி. இவர் 17 வயது சிறுமியை கட்டிட சித்தாள் வேலைக்கு அழைத்து சென்று நெருக்கமாக பழகி வந்துள்ளார். பின்னர் அந்த சிறுமியின் தாயார் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து அங்கு சென்று ஆசைவார்த்தை கூறி சிறுமியிடம் தனிமையில் இருந்துள்ளார். இதனால் பயந்து போன சிறுமியின் தாயார் தனது வீட்டை வேறு கிராமத்திற்கு மாற்றி சென்றார். ஆனாலும் சிவக்குமார் அங்கு சென்று சிறுமியிடம் பழகி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சிறுமி வயிறு வலிப்பதாக கூறியதால் அவரை தாராபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்று மருத்துவ பரிசோதனை செய்தனர். அப்போது சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. இதையடுத்து சிறுமியின் தாயார் சிவக்குமார் மீது தாராபுரம் அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து போக்சோ சட்டத்தின் கீழ் சிவக்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# நண்பரின் மனைவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது



கோவை, மே. 27

கோவை மாவட்டம் வடமதுரை பி.ஜி.புதுரில் காதல் திருமணம் செய்து கொண்ட தம்பதி வசித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் வேலை இல்லாமல் இருந்துள்ளனர். இதில் மனைவி நர்சிங் படித்துள்ளார். இவர்களது நண்பர் ஈரோடு மாவட்டம் டி.என்.பாளையத்தை சேர்ந்த தரண் (வயது 19) என்பவரிடம் வேலை இருந்தால் ஏற்பாடு செய்து தாருங்கள் என்று போனில் கேட்டுள்ளனர்.

இந்தநிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு நிதி நிறுவனத்தில் வேலை உள்ளது என்றும், எனவே நேரில் வரும்படியும் தரண் கூறி உள்ளார். இதைத்தொடர்ந்து கணவன் மனைவி இருவரும் கோவையில் இருந்து பஸ்சில் கோபி பஸ் நிலையத்துக்கு வந்தனர்.

அப்போது தரண் அந்த பெண்ணை மட்டும் அலுவலகத்துக்கு அழைத்து செல்வதாக கூறி தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்றார். கோபி அருகே வேட்டைக்காரன் கோவில் கீழ்பவானி வாய்க்கால் பகுதிக்கு சென்றபோது மோட்டார் சைக்கிளை நிறுத்திய தரண், யாரும் இல்லாத இடத்துக்கு அந்த பெண்ணை அழைத்து சென்று அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. மேலும் இதுகுறித்து வெளியே சொன்னால் கொலை செய்து விடுவதாக தரண் மிரட்டி உள்ளார். இதைத்தொடர்ந்து நடந்த சம்பவம் குறித்து தனது கணவரிடம் அழுது கொண்டே அந்த பெண் கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் உடனே இதுகுறித்து கோபி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், தரணை கைது செய்தனர்.

# துப்பட்டாவால் கைகள் கட்டப்பட்ட நிலையில் கடற்பகுதியில் சிறுவன், சிறுமி உடல் சென்னையில் அதிர்ச்சி



சென்னை, மே. 27

சென்னை மாதவரம் அருகே உள்ள மாத்தூர் பகுதியை சேர்ந்த ஸ்ரீசாந்த் (வயது 14) என்ற மாணவன் அங்குள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து முடித்துள்ளான். மாணவனும், அவனது எதிர்வீட்டில் வசிக்கும் சந்தியா (15). என்ற சிறுமியும் ஒரு வருடமாக காதலித்து வந்ததாக தெரிகிறது. இது பற்றி தெரிந்ததும் அவர்களை இருவீட்டு பெற்றோரும் கண்டித்தனர். ஆனால் இதனை கண்டு கொள்ளாமல் இருவரும் சந்தித்து காதலித்து வந்தனர்.

நேற்று முன்தினம் காலை ஸ்ரீசாந்தும், சந்தியாவும் ஒரே மொபட்டில் வெளியே சென்றனர். அதன்பிறகு அவர்கள் வீடு திரும்பி வரவில்லை. இதனால் பதற்றம் அடைந்த பெற்றோர், போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கும், மாதவரம் பால்பண்ணை போலீஸ் நிலையத்திலும் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் இருவரது செல்போன் சிக்னலை வைத்து திருவொற்றியூர், சுதந்திரபுரம் கடற்கரைக்கு வந்தனர். அப்போது கடலில் கைகளை கட்டிய நிலையில் ஸ்ரீசாந்த், சந்தியா இருவரும் பிணமாக மிதந்து கொண்டு இருந்தனர்.

இதையடுத்து மீனவர்கள் உதவியுடன் பைபர் படகில் கடலுக்குள் சென்று இருவரது உடலையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் சந்தியாவின் துப்பட்டாவால் இருவரது கைகளையும் சேர்த்து கட்டி கொண்டு இருவரும் கடலில் குதித்து தற்கொலை செய்து இருப்பது தெரிய வந்தது. 2 பேரின் உடல்களையும் பார்த்து அவர்களின் பெற்றோர் கதறி அழுதனர்.

இருவரும் வேறு, வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும் இவர்களின் காதலுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதாக கூறப்படுகிறது. இது குறித்து போலீசார் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்தபகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# கோவில் திருவிழாவின்போது பைக் சாகசம்: விபத்தில் 2 நண்பர்கள் பலி

தூத்துக்குடி, மே. 27

தூத்துக்குடி மாவட்டம் குரும்பூர் அருகே உள்ள குழைக்கநாதபுரத்தை சேர்ந்த இளைஞன் ஜீவா என்ற ஜீவரத்தினம் (வயது 22). இவரும் அதேபகுதியை சேர்ந்த பிரதீப்குமாரும் (23 வயது) நண்பர்கள்.

இந் நிலையில், குழைக்கநாதபுரத்தில் உள்ள கட்டையன் பெருமாள் சுவாமி கோவில் கொடை விழா நேற்று முன்தினம் தொடங்கியது. விழாவில் கலந்து கொள்ள 2 பேரும், மற்றொரு நண்பரான ஆறுமுகநேரியை சேர்ந்த பூபதிராஜாவை (22) அழைத்துள்ளனர். 3 பேரும் கொடைவிழாவில் கலந்து கொண்டு விட்டு பைக்கில் சுற்றியுள்ளனர். இரவு 11.30 மணியளவில் நெல்லை திருச்செந்தூர் ரோட்டில் 3 பேரும் பைக்கில் சாகசம் செய்துள்ளனர். இதில், ஜீவா, பிரதீப் ஓட்டிய பைக்குள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த கோர விபத்தில் 2 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பூபதிராஜா பலத்தகாயத்துடன் உயிர் தப்பினார்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் படுகாயமடைந்த பூபதியை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி: தனியார் பஸ் மரத்தில் மோதிய விபத்தில் டிரைவர் பலி 20 பேர் படுகாயம்

துறையூர், மே. 27

சேலம் மாவட்டம் ஆத்தூரில் இருந்து திருச்சி மாவட்டம் துறையூருக்கு தனியார்பஸ் வந்து கொண்டிருந்தது.

பஸ்சை சேலம் மாவட்டம் ஓலம்புதூர் கிராமத்தைச் சேர்ந்த வரதராஜன் (வயது 44) என்பவர் ஓட்டி வந்தார். பஸ் துறையூர் சத்தியநாராயண சிட்டி அருகே வந்து கொண்டிருந்தது.

அப்போது, மோட்டார் சைக்கிளில் 2 பேர் மது போதையில் தாறுமாறாக வந்ததாக தெரிகிறது.

இதனால் பஸ் டிரைவர் அவர்கள் மீது மோதாமல் இருப்பதற்காக பஸ்சை திருப்பியுள்ளார். இதில் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையோர மரத்தில் மோதியது.

இதில் பஸ்சின் முன்பகுதி சேதம் அடைந்தது. டிரைவர் வரதராஜன் பஸ்சின் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடினார். இந்த விபத்தை கண்டவர்கள் துறையூர் போலீஸ் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் அவர்கள் விரைந்து வந்து சுமார் ஒரு மணி நேரம் போராடி டிரைவர் வரதராஜனை மீட்டு துறையூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்தார். மேலும் பொது மக்களும் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் துறையூர், திருச்சி அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து குறித்து துறையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆள் இல்லாத வீட்டுக்குள் புகுந்த சிறுத்தை: மயக்க ஊசி செலுத்தி பிடித்த வனத்துறையினர்

கூடலூர், மே. 27

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனப்பகுதியில் காட்டு யானைகள், கரடிகள், சிறுத்தைகள், புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. அவை ஊருக்குள் அடிக்கடி புகுந்து வருகின்றன. கூடலூர் அருகே ஸ்ரீமதுரை ஊராட்சி பகுதியில் கரடிகள் நடமாட்டம் கடந்த சில நாட்களாக உள்ளது.

இந்தநிலையில் ஸ்ரீமதுரை அருகே சேமுண்டி கொரவயல் பகுதியை சேர்ந்த சின்னம்மா என்பவரது காபி தோட்டத்தில் வீடு உள்ளது. இங்கு அவரது குடும்பத்தினர் யாரும் இல்லை. இதனால் காபி தோட்டத்தில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் வீட்டை பயன்படுத்தி வந்தனர். நேற்று அதே பகுதியை சேர்ந்த தொழிலாளி இடும்பன் என்பவர் காபி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்.

பின்னர் அவர் மதியம் 12 மணியளவில் தோட்டத்தில் உள்ள வீட்டுக்குள் சென்றார். அப்போது வீட்டுக்குள் பதுங்கி இருந்த சிறுத்தை ஒன்று திடீரென இடும்பன் மீது கண்ணிமைக்கும் நேரத்தில் பாய முயன்றது. இதனால் சுதாரித்துக்கொண்ட இடும்பன் அலறியடித்தபடி வீட்டுக்குள் இருந்து வெளியே ஓடினார்.

அவரை சிறுத்தை ஆக்ரோஷமாக துரத்தியவாறு வந்தது. அந்த சமயத்தில் வீட்டுக்குள் இருந்த பிளாஸ்டிக் நாற்காலியை உடைத்து கொண்டு சிறுத்தை பாய்ந்தது. தொடர்ந்து இடும்பன் வீட்டை விட்டு வெளியே ஓடிவந்ததுடன் சாமர்த்தியமாக முன்பக்க கதவையும் இழுத்து பூட்டினார். இதனால் சிறுத்தை வீட்டுக்குள் சிக்கியது. இதையடுத்து, தப்பித்தோம், பிழைத்தோம் என இடும்பன் பெருமூச்சு விட்டார். இது குறித்து தகவல் அறிந்ததும் வனத்துறையினர், போலீசார் அங்கு விரைந்து வந்தனர். நீண்டநேர போராட்டத்துக்கு பின்னர் இரவில் அந்த சிறுத்தையை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி பிடித்தனர்.

# நடத்தை சந்தேகத்தால் வெறிச்செயல்: மனைவியை கழுத்தை நெரித்துக் கொன்ற டிரைவர்





தூத்துக்குடி, மே. 27

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரை அடுத்த மேல ஆத்தூர்சுப்பிரமணியபுரம் தெருவைச் சேர்ந்தவர் ஜெயக்குமார் (வயது 41). இவர் வாடகை கார் டிரைவராக வேலை செய்து வருகிறார்.

இவருடைய மனைவி பொன்மாரி(33). இவர்களுக்கு உஷாதேவி(13), உமாதேவி(10) ஆகிய 2 மகள்களும், தீனா மாடசாமி(8) என்ற மகனும் உள்ளனர். ஜெயக்குமார் தனது மனைவி பொன்மாரியின் நடத்தையில் சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்து வந்ததாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவில் மீண்டும் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த ஜெயக்குமார் தனது மனைவி பொன்மாரியை சரமாரியாக அடித்து உதைத்ததாக கூறப்படுகிறது. மேலும் தனது முழங்காலால் மனைவியின் கழுத்தை நெரித்ததாகவும் கூறப்படுகிறது.

இதில் பொன்மாரி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து ஆத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஜெயக்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# கடன் தொல்லையால் 5 உயிர்கள் பறிபோன சோகம்: செல்போன்களில் சிக்கிய முக்கிய ஆதாரங்கள்..?



சிவகாசி, மே. 27

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் ஸ்டேண்டர்டு காலனி பகுதியை சேர்ந்தவர் ஆசிரியர் லிங்கம் (வயது 44). அவரது மனைவி ஆசிரியை பழனியம்மாள்(47), மகள் ஆனந்தவள்ளி (24), மகன் ஆதித்யா (13) பேத்தி 3 மாத குழந்தை சஷ்டிகா என குடும்பத்தில் இருந்த 5 பேரும் கடந்த 23ந்தேதி வீட்டில் பிணமாக கிடந்தனர். பெரும் பரபரப்பு ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.


கடன் தொல்லையால் குடும்பத்தில் உள்ள 5 பேரும் தற்கொலை செய்து கொண்ட நிலையில் கடன் கொடுத்தவர்கள் யாராவது ஆசிரியர் லிங்கம் மற்றும் அவரது மனைவி பழனியம்மாள் ஆகியோரை மிரட்டினார்களா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையில் லிங்கம் வீட்டில் இருந்து போலீசார், 3 செல்போன்களை பறிமுதல் செய்துள்ளனர். அது லிங்கம், அவரது மனைவி பழனியம்மாள், மகள் ஆனந்தவள்ளி ஆகியோர் பயன்படுத்தியது என்பது தெரியவந்துள்ளது. லிங்கம் பயன்படுத்தி வந்த செல்போனில் இருக்கும் வாஸ்ட்அப் பதிவுகளை போலீசார் ஆராய்ந்த போது சிலர் கடன் தொகையை திருப்பி கேட்டு அனுப்பி இருந்த மெசேஜ்கள் இருந்தன. இதனை கொண்டு ஆசிரியர் லிங்கத்துக்கு யார்? யார்? கடன் கொடுத்தார்கள் என்ற பட்டியலை போலீசார் முதல் கட்டமாக தயாரித்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆசிரியர் லிங்கத்துக்கு கடன் கொடுத்தவர்களில் சிலர் முக்கிய புள்ளிகளாக இருப்பதாக கூறப்படுகிறது. அவர்கள் எவ்வளவு பணம் கொடுத்தார்கள், அந்த பணத்தை ஆசிரியர் லிங்கம் திருப்பி கொடுத்தாரா அல்லது அதற்கு பதில் ஏதாவது நிலத்தை எழுதி கொடுத்தாரா? என்ற விவரம் குறித்தும் விசாரணை நடக்கிறது.

சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த சுமார் 20 பேர் இந்த பட்டியலில் இருப்பதாக கூறப்படுகிறது.

# புதிய அணை கட்ட முயற்சி: கேரள அரசை கண்டித்து 5 மாவட்ட விவசாயிகள் இன்று போராட்டம்



தேனி, மே. 27

தமிழககேரள எல்லையில் முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ளது. இந்த அணையின் நீர்மட்ட உயரம் 152 அடி. அதில் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி 142 அடி வரை தண்ணீர் தேக்கப்படுகிறது. அணைப் பகுதியில் உள்ள பேபி அணையை பலப்படுத்திவிட்டு நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்று 2014ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. ஆனால், பேபி அணையை பலப்படுத்தும் பணியை தொடங்கவிடாமல் கேரள அரசு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

அதேபோல், முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்டிவிட்டு, பழைய அணையை இடிக்க வேண்டும் என்றும் கேரள அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, முல்லைப்பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணையை நாங்களே கட்டிக்கொள்கிறோம் என்று மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு கேரள அரசு கடிதம் எழுதியுள்ளது.

இந்த கடிதத்தை அமைச்சகம், நிபுணர் மதிப்பீட்டு குழுவுக்கு அனுப்பி உள்ளது. இதையடுத்து நாளை மறுநாள் நடக்கவுள்ள நிபுணர் மதிப்பீட்டு குழுவின் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பாக பரிசீலிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில், பலமாக உள்ள அணையை இடித்து விட்டு புதிய அணை கட்ட துடிக்கும் கேரள அரசை கண்டித்து தேனி மாவட்டம் கூடலூர் அருகே லோயர் கேம்ப்பில் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் குட்கா, பான் மசாலா தடை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு

சென்னை, மே. 27

தமிழகத்தில் குட்கா, பான்மசாலா மற்றும் புகையிலைப் பொருட்கள் விற்பனை, விநியோகத்திற்கான தடை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

2025ம் ஆண்டு மே 23ம் தேதி வரை தடை நீட்டிக்கப்பட்டுள்ளது. புகையிலை அடிப்படையிலான பான் மசாலா உள்ளிட்ட பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதால் கடந்த 2013ம் ஆண்டு முதல் தடை விதிக்கப்பட்டது.

2013ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தடை நீட்டிக்கப்பட்டு வருகிறது.

தடையை மீறி குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# ஐஸ்கிரீமில் விஷம் கலந்து 2 குழந்தைகளை கொன்று தாய் எடுத்த விபரீத முடிவு



சேலம், மே. 27

சேலம் மாவட்டம் புள்ளாக்கவுண்டம்பட்டி அக்ரஹாரம் ஊராட்சி வினோபாஜிநகர் பகுதியை சேர்ந்தவர் கோகுல் (வயது 30). ஆட்டோ டிரைவர். அதே பகுதியை சேர்ந்த ஷில்பா என்ற சுகமதி (24). பி.எஸ்சி பட்டதாரி. இவர்கள் இருவரும் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இவர்களுக்கு சஞ்சனாஸ்ரீ (6), க்ரிஷிகா (1) ஆகிய 2 மகள்கள் இருந்தனர். சஞ்சனாஸ்ரீ அங்குள்ள பள்ளிக்கூடத்தில் 1ம் வகுப்பு படித்து வந்தாள். வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்த இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில், கணவன், மனைவி இடையே அடிக்கடி சிறு சிறு பிரச்சினைகள் வந்துள்ளது. சில நேரங்களில் அது கைகலப்பாகவும் மாறியது உண்டாம். கடந்த ஒரு மாதத்துக்குமுன்பு கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஷில்பா, கோகுலை தாக்கியதாக கூறப்படுகிறது. மனைவி நம்மை அடித்து விட்டாளே என வேதனை அடைந்த கோகுல், அந்த பகுதியில் உள்ள பெரியம்மா வீட்டுக்கு சென்றார். அங்கிருந்து கடந்த ஒரு மாதமாக ஆட்டோ ஓட்டி வருகிறார்.

ஒன்றிரண்டு நாட்கள் பொறுத்த ஷில்பா, கணவரை தொடர்பு கொண்டு நாம் சேர்ந்து வாழலாம் வாருங்கள் என்று அழைத்துள்ளார். அதற்கு கோகுல் என்னை ஏன் அடித்தாய்? என்று கேட்டுள்ளார். இப்படியாக ஒரு மாதம் கடந்து விட்டது.

ஷில்பா, கணவரை தொடர்பு கொண்டுள்ளார். ஆனால் கோகுல் செல்போனை எடுத்து பேசவில்லையாம். காதல் கணவனே நம்மிடம் பேசவில்லை. இனி நாம் யாருக்காக உயிருடன் இருக்க வேண்டும் என்று மனம் உடைந்த ஷில்பா வாழ்க்கையில் விரக்தி அடைந்துள்ளார்.

ஐஸ்கிரீமில் விஷம் கலந்து 2 குழந்தைகளுக்கும் கொடுத்துள்ளார். தொடர்ந்து தானும் அதே ஐஸ்கிரீமை சாப்பிட்டுள்ளார். பின்னர் அவர் வழக்கம் போல் குழந்தைகளுடன் தூங்க சென்றுள்ளார். நேற்று காலையில் ஷில்பா வீட்டுக்கு அவருடைய தந்தை சென்றுள்ளார். அப்போது வீட்டுக்கதவு திறந்து கிடந்ததாம். உடனே வீட்டுக்குள் சென்று பார்த்த போது அங்கு ஷில்பா, அவருடைய 2 குழந்தைகள் பிணமாக கிடந்தனர். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த ஷில்பாவின் தந்தை கதறி அழுதார். அவரது அழுகை சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அங்கு ஓடி வந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த தேவூர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். 3 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கோகுலை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில் மோதி முதியவர் பலி

கடலூர், மே. 27

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் வைடிப் பாக்கம் ரெயில்வே தண்டவாளம் பகுதியில் 75 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் ரத்த காயங்களுடன் பிணமாக கிடந்தார். இதைபார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் இதுபற்றி கடலூர் முதுநகர் ரெயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்துமுதியவரின்உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இறந்த முதியவர் குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், அவர் புதுச்சேரி தட்டாஞ்சாவடி குண்டுபாளையம் பகுதியை சேர்ந்த மணி (75) என்பதும், அவர் மனைவியை பிரிந்து கடலூரில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் வசித்து வந்துள்ளதும் தெரியவந்தது. சம்பவத்தன்று சொந்த வேலையாக நெல்லிக்குப்பம் வந்த மணி அங்குள்ள தண்டவாளத்தை கடக்க முயன்றபோது அவ்வழியாக சென்ற சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில் மோதி உயிரிழந்ததும் தெரியவந்தது. இது குறித்து ரெயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கள்ளச்சந்தையில் ஐ.பி.எல். டிக்கெட் விற்பனை: 2 பேர் கைது

சென்னை, மே.27

சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் ஐ.பி.எல். இறுதிப்போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டம் நடைபெற்றது. சன் ரைசர்ஸ் ஐதராபாத்ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டிக்கான 'டிக்கெட்' மைதானத்தின் வெளியே கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக திருவல்லிக்கே ணி போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதற்காக டிக்கெட்டு கள் வைத்திருந்த ராயப்பேட்டை பகுதியை சேர்ந்த தாஹா அலி (வயது 18), திருவொற்றியூர் காலடிப்பேட்டை பகுதியை சேர்ந்த ராஜ்திலக் (33) ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ரூ.42 ஆயிரம் மதிப்புள்ள 18 டிக்கெட்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# சென்னையில் அதிர்ச்சி சம்பவம் போதை ஊசி போட்டு சிறுவன் பலி

ராயபுரம், மே.27

புளியந்தோப்பு மன்னார் சாமி தெரு டிக்காஸ் ரோட்டை சேர்ந்தவர் தஸ்தகீர். இவரது மகன் ஜாகீர். 17 வயதான இவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 10ம் வகுப்பு படித்து முடித்துள்ளார்.பின்னர்படிப்பை தொடராமல் கடந்த 6 மாதங்களாக எலக்ட்ரீசியன் ஹெல்பராக வேலை செய்து வந்தார்.

இந்நிலையில் ஜாகீர் போதை ஊசிக்கு அடிமையாகி உள்ளான். இதைத் தொடர்ந்து நேற்று பாரிமுனையில் உள்ள 17 வயது நண்பன் வீட்டில் பிறந்த நாள் கொண்டாடியதாக கூறப்படுகிறது.

அப்போது ஜாகிர் உள்பட நண்பர்கள் 4 பேரும் சேர்ந்து போதை ஊசி போட்டுக் கொண்டுள்ளனர்.

ஜாகிர் ஊசி செலுத்திக் கொண்ட பிறகு சாலையில் நடந்து வந்தபோது மயங்கி கீழே விழுந்தான். இதைப் பார்த்த நண்பன் ஒருவன் ஜாகிரை மீட்டு மோட்டார் சைக்கிளில் ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தார். அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் வரும் வழியில் இறந்து விட்டதாக தெரிவித்தனர். சிறுவனின் கையில் போதை ஊசி போட்டுக் கொண்ட அடையாளங்கள் இருந்தது. இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

இதுகுறித்து எக்ஸ்பிளனேடு போலீசார் சிறுவனின் நண்பர்களிடம் போதை ஊசி எப்படி கிடைத்தது? யார் மூலம் கிடைத்தது? எவ்வளவு பணம் கொடுத்து வாங்கினீர்கள் என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சென்னையில் போதை ஊசி நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ஏற்கனவே பல உயிர்கள்பறிக்கப்பட்டன. இந்த நிலையில் 17 வயது சிறுவனும் தற்போது உயிரிழந்துள்ளான். இதையடுத்து போலீசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கு போதை ஊசியை விற்பனை செய்த போதை ஊசி கும்பலை பிடிக்க அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வலி நிவாரண மாத்திரைகளை வாங்கி போதைப்பொருளாக விற்பனை செய்த வாலிபர் கைது

திருப்பூர், மே. 27

திருப்பூரில் வலி நிவாரண மாத்திரைகளை போதைப் பொருளாக பயன்படுத்துவதாக தொடர்ந்து போலீசாருக்கு புகார்கள் வந்தது. இதையடுத்து மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன் குமார் அபிநபு உத்தரவு பேரில் காவல்துறையினர் மருந்து கடைகளில் ஆய்வு நடத்தினர். மருத்துவர்களின் பரிந்துரை கடிதம் இல்லாமல் வலி நிவாரண மாத்திரைகளை விற்கக் கூடாது என உரிமையாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருந்தனர். இந்நிலையில் வீரபாண்டி பகுதியில் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த சற்குணப்பாண்டியன் ( 27 ) என்பவர் ஆன்லைன் மூலமாக மொத்தமாக நிவாரண மாத்திரைகளை வாங்குவது போலீசாருக்கு தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து வடக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் உதயகுமார் மற்றும் உதவி இன்ஸ்பெக்டர் இளஞ்செழியன் தலைமையிலான போலீசார் சற்குண பாண்டியனை தொடர்ந்து நோட்டமிட்டு வந்தனர். அப்போது வீரபாண்டி அருகே கொரியரில் வந்த 200 வலி நிவாரண மாத்திரைகளை சற்குணபாண்டியன் பெற்றபோது வடக்கு போலீசார் அவரை கையும் களவுமாக பிடித்தனர். அவர் வலி நிவாரண மாத்திரைகளை ஆன்லைன் மூலம் வாங்கி தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்குபோதை ஏற்றுவதற்காக வழங்கியதுவிசாரணையில்தெரிய வந்ததுஇதனைதொடர்ந்து சற்குண பாண்டியனை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்த 200 வலி நிவாரண மாத்திரைகளையும் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தியபோது அவர் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக ஆன்லைனில் வலி நிவாரண மாத்திரைகளை ஆர்டர் செய்து தொழிலாளர்கள் மற்றும் நண்பர்களுக்கு விற்பனை செய்துள்ளார். ஒரு மாத்திரையை ரூ. 35க்கு வாங்கி அதனை 10 மடங்கு அதிகமாக ரூ.350 வரை விற்பனை செய்துள்ளார்.

# ஏற்காடு கோடைவிழா பனிமூட்டத்தை கண்டு ரசித்த சுற்றுலா பயணிகள்



ஏற்காடு, மே. 27

ஏற்காடு கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி 3வது நாளான ஏராளமான சுற்றுலா பயணிகள் மலர் கண்காட்சியை காண திரண்டு வந்தனர். தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகா போன்ற இடங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏற்காட்டில் குவிந்துள்ளனர்.

ஏற்காடு சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2 வாரமாக பரவலாக மழை பெய்து சீதோசன நிலை மிகவும் குளுமையாக மாறி உள்ளது. இதனால் ஏற்காட்டில் குளிர் அதிகமாக காணப்படுகிறது தற்போது கோடை விழா மலர் கண்காட்சி நடைபெற்று வருவதால் இந்த கால சூழ்நிலையை இங்கு வந்துள்ள சுற்றுலா பயணிகள் வெகுவாக ரசித்து வருகின்றனர். பூத்துக் குலுங்க மலர்களையும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள உருவங்களையும் கண்டு ரசித்து செல்பி எடுத்து மகிழ்ந்து வருகின்றனர். ஏற்காட்டில் இன்று காலை கடுமையான பனிமூட்டம் நிலவியது. சுற்றுலா பயணிகள் பனிமூட்டத்தை போட்டோ எடுத்தும் செல்பி எடுத்தும் மகிழ்ச்சி அடைந்தனர்.

# புள்ளிமானை வேட்டையாடி கறியை விற்பனை செய்தவர் கைது



தருமபுரி, மே. 27

தருமபுரி வனக்கோட்டம், மொரப்பூர் வனச்சரகம் அரூர்காப்புக்காடு புளியன்தோப்பு சரகத்தில் கடந்த 10ந் தேதி கன்னி வலைகளைகொண்டு புள்ளிமானை வேட்டையாடி தலைமறைவான சோலைக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சிவன் (வயது 48), கொளகம்பட்டி அடுத்த எருக்கம்பட்டி கிராமத்தைச்சேர்ந்த சேட்டு என்கிற பெருமாள் ஆகிய 2 பேரும் புள்ளிமானை வேட்டையாடி அதன் கறியை சோளக்கொட்டாய் பகுதியை சேர்ந்த அல்லி முத்து என்பவர் மூலம் பாப்பாரப்பட்டி பகுதியில் மான்கறி விற்பனை செய்த்தற்காக பாலக்கோடு வனச்சரகத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அல்லி முத்து என்பவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் மொரப்பூர் வனச்சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் சிவன் மற்றும் சேட்டு ஆகியோர் புள்ளிமானை வேட்டையாடி கறியினை விற்ற குற்றத்திற்காக விசாரணைக்கு அழைத்தபோது விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகி விட்டனர்.

இதைதொடர்ந்து அவர்களை பிடிக்க வனப் பாது காப்புப்படை மற்றும் வனச்சரக பணியாளர்கள் இணைந்து குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் கடந்த 25ந் தேதி சிவனை கைது செய்து, மொரப்பூர் வனச்சரக அலுவலகம் கொண்டுவரப்பட்டு விசாரணை செய்ததில் அரூர்காப்புக்காட்டில் புள்ளிமானை வேட்டையாடி அதன் கறியை விற்பனை செய்ததை ஒப்புக் கொண்டார்.

பின்னர் சிவன் மீது வனக்குற்றத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் அறிவுரைப்படி, அரூர் உதவி வனப்பாதுகாவலர் சரவணன் ஆலோசனை படியும், சிவனை மொரப்பூர் வனச்சரக அலுவலர் ஆனந்தகுமார், வனப்பாதுகாப்பு படை வனச்சரக அலுவலர் ஆலயமணி, வனச்சிப்பந்திகள் ஆகியோர் அரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சிவனை ஆஜர் படுத்தினர். பின்னர் நீதிமன்ற ஆணைப்படி 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டார்.

# ஜெயக்குமாரின் குடும்பத்தினரிடம் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டு நேரடி விசாரணை



நெல்லை, மே. 27

நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் மர்மச்சாவு வழக்கில் சுமார் 3 வாரங்களாக எந்தவித துப்பும் கிடைக்காத நிலையில், அந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் வழக்குப்பதிவு செய்த சி.பி.சி.ஐ.டி. போலீசார் அன்றைய தினமே தங்களது விசாரணையையும் தொடங்கினர். முதல்கட்டமாக ஜெயக்குமார் உடல் கிடந்த அவரது வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் ஆய்வு செய்தனர். பின்னர் அந்த கிராமத்தின் நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் உள்பட பலரிடம் விசாரித்தனர்.

தொடர்ந்து 2வது நாளான நேற்று அந்த கிராமத்தில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்தனர். பின்னர் நேற்று மாலையில் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டு முத்தரசி தலைமையில் அதிகாரிகள் கரைசுத்துபுதூருக்கு மீண்டும் புறப்பட்டு சென்றனர். அப்போது அவர்கள் ஜெயக்குமாரின் குடும்ப உறுப்பினர்களிடம் தங்களது சந்தேக கேள்விகளை கேட்டு அதற்கு விளக்கம் பெற்றனர்.

இந்நிலையில் இன்று காலையில் போலீஸ் சூப்பிரண்டு முத்தரசி தலைமையில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சங்கர், துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜ்குமார் நவ்ரோஜ், விசாரணை அதிகாரியான இன்ஸ்பெக்டர் உலகராணி மற்றும் போலீசார் 2 வாகனங்களில் மீண்டும் கரை சுத்துபுதூருக்குபுறப்பட்டனர்.

ஜெயக்குமாரின் மனைவி ஜெயந்தி மற்றும் அவரது மகன்களானகருத்தையா,ஜோ மார்ட்டின் ஆகியோரிடம் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தி அவர்கள் கூறும் தகவல்களை எழுத்துப்பூர்வமாக எழுதி வாங்க முடிவு செய்துள்ளனர். மேலும் அவரது வீட்டின் அருகே உள்ள அக்கம்பக்கத்தினரிடமும், நண்பர்களிடமும் விசாரிக்க உள்ளனர்.

இந்த விசாரணை முழுவதும் சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டு முத்தரசி முன்னிலையில் முழுக்க முழுக்க நடைபெற்று வருவதால் மர்மச்சாவு வழக்கு சூடுபிடித்துள்ளது.

ஜெயக்குமார் குடும்ப உறுப்பினர்களிடம் விசாரணை முடிந்த பின்னர், இறப்புக்கு முன் அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரிக்க முடிவு செய்துள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ராமநாதபுரத்தில் தொழிலாளி அடித்துக்கொலை

ராமநாதபுரம், மே. 27

ராமநாதபுரம் அருகே கிழக்கு சாயகார ஊரணியை சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் ரவிக்குமார் (வயது 35). ராமநாதபுரம் மாவட்டம் சணல்வேலி அருகே உள்ள செட்டியகோட்டை என்ற ஊரை சேர்ந்தவர் கணேசன் (40). இவர் ரவிக்குமாரின் அக்காள் கணவரின் தம்பி ஆவார். இவர் புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறார். ரவிக்குமார் ராமநாதபுரம் அரண்மனை அருகே உள்ள பெருமாள் ஆசாரி என்பவருக்கு சொந்தமான அப்பார்ட்மெண்டில் கடந்த 3 ஆண்டுகளாக வாடகைக்கு வீடு எடுத்து தங்கி கூலி செய்து வந்தார்.

அதே அப்பார்ட்மெண்டில் கணேசனும் குடியிருந்து வருகிறார். இருவரும் உறவினர்கள் என்பதால் அடிக்கடி ஒன்றாக சேர்ந்து மது அருந்து விட்டு வருவது வழக்கம்.

சம்பவத்தன்று அந்த பகுதியில் உள்ள டாஸ்மாக் மதுபான கடைக்கு இருவரும் சென்றுள்ளனர். நன்றாக குடித்தனர். அதன் பிறகு போதை தலைக்கு ஏற தள்ளாடியபடியே இருவரும் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். இதில் இருவருக்கும் இடையில் மதுபோதையில் வாக்கு வாதம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து இருவரும் ஒருவரையொருவர் தாக்கி கொண்டனர். இதில் ஆத்திரம் அடைந்த ரவிக்குமார் அருகில் கிடந்த செங்கலை எடுத்து கணேசனை தாக்கினார்.

இதற்கு பதிலடியாக அருகில் இருந்த மூங்கில் கம்பை எடுத்து ரவிக்குமாரின் தலையில் ஒரே போடாக போட்டார். இதில் தலையில் பலத்த காயம் அடைந்த ரவிக்குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

உடனடியாக தகவல் அறிந்த கேணிக்கரை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ரவிக்குமாரின் உடலை மீட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கேணிக்கரை போலீசார் வழக்குப்பதிவு செய்து கணேசனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கேரள அரசை கண்டித்து 5 மாவட்ட விவசாயிகள் இன்று போராட்டம்

கூடலூர், மே. 27

முல்லைப்பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசன தேவையை பூர்த்தி செய்து வருகிறது. கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணை 999 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் தமிழக நீர் வளத்துறை பராமரிப்பில் உள்ளது. பூகோள அடிப்படையில் கேரளாவில் இருந்தாலும் அணை பராமரிப்பு முழுவதும் தமிழக அரசே மேற்கொண்டு வருகிறது.

அணை பலவீனமாக இருப்பதாக கேரள அரசு தொடர்ந்து பிரச்சனை செய்து வருகிறது. இது தொடர்பான வழக்கில் அணையை உறுதி செய்யும் தன்மையை உச்சநீதிமன்றமே வல்லுனர் குழுவை 11 முறை அனுப்பி உறுதி செய்தது. அணையின் கீழ் பகுதியில் உள்ள பேபி அணையை பலப்படுத்தி முழு கொள்ளளவு தண்ணீர் தேக்கிக் கொள்ள உத்தரவிட்டது. அதன்படி 10.5 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட அணையில் 7.86 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே தற்போது வரை தேக்கப்படுகிறது. அணையில் முழு கொள்ளளவு நீரை சேமிக்க முடியாததால் 5 மாவட்டங்களின் பாசன பரப்பை அதிகரிக்க முடியாமலும், குடிநீர் வழங்கும் பணியை விரிவாக்கம் செய்வதிலும் சிக்கல் நீடித்து வருகிறது.

இது தவிர அணையை பலப்படுத்தும் பணிகளை தமிழக அரசு மேற்கொள்ள கேரள வனத்துறை பல ஆண்டுகளாக முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இந்த சூழலில்தான் புதிய அணை கட்ட வேண்டும் எனவும், தற்போதுள்ள முல்லைப்பெரியாறு அணை பலமிழந்து விட்டதால் இடிந்து இடுக்கி மாவட்டத்தில் உள்ள அணைகள் முழுவதும் சேதமாகும் என்றும், வீண் வதந்தி பரப்பி வருகிறது.

இந்நிலையில் முல்லைப்பெரியாற்றில் புதிய அணை கட்ட அனுமதி கேட்டு கேரள அரசு கடந்த ஜனவரி மாதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் மனு அளித்தது. அதில் முல்லைப்பெரியாறு அணை கட்டப்பட்டு 128 ஆண்டுகள் ஆகி விட்டதால் அணையின் கீழ்பகுதியில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள், வன விலங்குகள் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனவே தற்போதுள்ள அணைக்கு 1200 அடி கீழே புதிய அணையை கட்டிய பின்பு பழைய அணையை இடிக்க அனுமதிக்க வேண்டும். புதிய அணை கட்டும் போதும், கட்டி முடிக்கப்பட்ட பின்பும் தமிழகத்துக்கான நீர் பகிர்வு தற்போதைய நிலையிலேயே தொடரும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை ஆய்வு செய்த அமைச்சகம் அதனை நிபுணர் மதிப்பீட்டுக்குழுவுக்கு கடந்த 14ந் தேதி அனுப்பியது.

மத்திய அரசின் நிபுணர் மதிப்பீட்டுக்குழு வருகிற 28ந் தேதிக்கு இது தொடர்பான கூட்டத்தை நடத்த உள்ளது. கேரளாவின்இந்தநடவடிக்கைதமிழகவிவசாயிகளிடையே கடுமையான கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே கேரள அரசை கண்டித்து வருகிற 27ந் தேதி மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்கஒருங்கிணைப்பாளர்அன்வர்பாலசிங்கம்கூறியதாவது:

முல்லைப்பெரியாறு அணை பிரச்சனையை வைத்து கேரளாவில் எந்த அரசு வந்தாலும் அரசியல் செய்து வருவதை வாடிக்கையாக வைத்துள்ளது. அணையை எப்படியாவது இடித்து விட்டு அந்த அணை தண்ணீர் முழுவதையும் இடுக்கி அணைக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்பது தான் கேரள அரசின் நிலைப்பாடாக உள்ளது. உச்சநீதிமன்றம் தலைசிறந்த வல்லுனர் குழுவை அமைத்து அணை பலமாக இருப்பதாகவும் பூகம்பம் ஏற்பட்டால் கூட எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்று உறுதி செய்த பின்பே 142 அடி வரை தண்ணீர் தேக்க உத்தரவிட்டது.

அதனையும் மீறி கேரள அரசு புதிய அணை கட்டுவதில் உறுதியாகஇருப்பது152அடிவரைஉயர்த்தமுட்டுக்கட்டை போடுவதற்காகத்தான். மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தை பணிய வைத்து முல்லைப்பெரியாறு அணையை அழித்து விட வேண்டும் என்று திட்டம் தீட்டும் கேரளாவின் கனவு ஒருபோதும் பலிக்காது. எனவே தமிழக அரசு இப்பிரச்சனையில் மென்மையான போக்கை கைவிட்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள அரசை கண்டித்து வருகிற 27ந் தேதி காலை 10 மணியளவில் மாபெரும் போராட்டம் நடத்தச் உள்ளோம். இந்த போராட்டத்தில் மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்ட விவசாயிகள் பங்கேற்பார்கள். பென்னி குவிக் நினைவிடத்தில் இருந்து திரண்டு பேரணியாக சென்று கேரள மாநில எல்லையில் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

# திருப்பூர் அருகே வெறி நாய் கடித்து கட்டிட தொழிலாளி பலி

வெள்ளகோவில், மே. 27

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில், உப்பு பாளையம் சாலை பகுதியைச்சேர்ந்தவர் முனுசாமி (வயது 45). கர்நாடக மாநிலம் மைசூரில் கட்டிட தொழிலாளியாக வேலை செய்து வந்தார். கடந்த 7 மாதங்களுக்கு முன்பு அவரை நாய் கடித்துள்ளது. ஆனால் அதற்கு சிகிச்சை பெறாமல் முனுசாமி இருந்து விட்டார்.

இந்தநிலையில் வெள்ளகோவிலுக்கு வந்த அவருக்கு திடீரென உடல் நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து அங்குள்ள மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்தார். அப்போது டாக்டர், உங்களை ஏதேனும் நாய் கடித்து உள்ளதா? என்று கேட்டுள்ளார். அதற்கு அவர், கடந்த 7 மாதங்களுக்கு முன்பு மைசூரில் நாய் ஒன்று கடித்து விட்டது என்று கூறியுள்ளார்.

உடனே அவரை கரூர் அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், திருச்சியில் உள்ள நாய் கடி சிறப்பு பிரிவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சையில் இருந்த முனுசாமி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

முனுசாமி நாய் கடித்து உயிரிழந்ததை தொடர்ந்து அவரது குடும்பத்தினரை வெள்ளகோவில் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் ராஜலட்சுமி உத்தரவின் பேரில் சுகாதார ஆய்வாளர் கதிரவன் மேற்பார்வையில் சுகாதார அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

# கஞ்சா விற்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கைது




வருசநாடு, மே. 27

தேனி மாவட்டம் கண்டமனூர் அருகே கணேசபுரம் மெயின்ரோடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை அருகே கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக கண்டமனூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்படி சப்இன்ஸ்பெக்டர் மலைச்சாமி தலைமையிலான போலீசார் அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்கேத்திற்கிடமாக சுற்றித்திரிந்த 3 பேரை பிடித்து விசாரித்தனர். அவர்கள்முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால் கிடுக்கிபிடி விசாரணை மேற்கொண்டனர்.

அதில் அவர்கள் கண்டமனூர் தெற்கு தெருவை சேர்ந்தபூவநாதன்மனைவி ரத்தினம்மாள் (70), அவரது மகன் பழனிச்சாமி, மருமகள் முருகேஸ்வரி என்பதும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து போலீசார் 3 பேரையும் கைது செய்து அவர்களிடம் இருந்த கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

இவர்கள் குடும்பத்துடன் அப்பகுதியில் சுற்றித்திரிந்து சிறுவர்களுக்கு கஞ்சா சப்ளை செய்து வந்ததும் தெரிய வந்தது. மேலும் 90 வழக்குகள் நிலுவையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# 'ஹிட் லிஸ்ட்' படத்தின் ட்ரெய்லரை விஜயிடம் காண்பித்து வாழ்த்து பெற்ற படக்குழு



'புது வசந்தம்' என்ற படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் விக்ரமன், தொடர்ந்து கோகுலம், பூவே உனக்காக, சூரியவம்சம், உன்னிடத்தில் என்னை கொடுத்தேன், வானத்தை போல உள்பட பல வெற்றிப் படங்களை தமிழ் சினிமாவிற்கு கொடுத்துள்ளார்.

மாறுபட்ட யதார்த்த கதை களத்துடன் வந்த அவரது ஒவ்வொரு படைப்பும் இன்றும் பேச வைத்துக் கொண்டிருக்கிறது. இவரது முதல் படமான 'புது வசந்தம்' படம் பல விருதுகளை பெற்றது.

இந்த நிலையில் விக்ரமனின் மகன் விஜய் கனிஷ்கா, கே.எஸ். ரவிக்குமார் தயாரிப்பில் உருவாகி வரும் 'ஹிட் லிஸ்ட்' என்ற படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகி நடித்து வருகிறார்.

சூர்ய கதிர் இயக்கும் இந்த படத்தில் சரத்குமார், சித்தாரா, கவுதம் மேனன், சமுத்திர கனி, முனிஸ்காந்த், ஸ்மிருதி வெங்கட் உள்பட பலர் நடித்துள்ளனர். சத்யா இசையமைத்துள்ளார். படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்து விரைவில் படம் திரைக்கு வர இருக்கிறது.

அண்மையில், விக்ரமன், அவரது மகன் விஜய் கனிஷ்கா, இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார் ஆகியோர் நடிகர் விஜயை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்த வீடியோ அப்போது சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இதையடுத்து இப்படத்தின் டிரைலரை நடிகர் சிவகார்த்திகேயன் அவரது எக்ஸ் பக்கத்தில் வெயிட்டார்.

இந்நிலையில், 'ஹிட் லிஸ்ட்' படத்தின் ட்ரெய்லரை நடிகர் விஜய்யிடம் காண்பித்து படக்குழு வாழ்த்து பெற்றுள்ளது.

1996ம் ஆண்டு விக்ரமன் இயக்கத்தில் வெளியான 'பூவே உனக்காக' படம் விஜய்யின் திரையுலக பயணத்தில் முக்கியமான படமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

# 'வாட்டர் பாக்கெட்' பாடலுக்கு வரிகள் எழுதிய கானா காதரை பாராட்டிய இசைப்புயல்



திரையுலகின் முன்னணி நடிகர் தனுஷ் நடிப்பை கடந்து பின்னணி பாடகர், பாடலாசிரியர் மற்றும் இயக்குநர் என பல பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார். தனுஷ் நடிப்பில் உருவாகும் 50 ஆவது படத்தை அவரை இயக்கி, நடித்து வருகிறார். ராயன் என்ற தலைப்பில் உருவாகி வரும் இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கும் இந்த படத்தின் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், இந்த படத்தின் அடுத்த பாடல் "வாட்டர் பாக்கெட்" தற்போது வெளியாகி உள்ளது. இந்த பாடலை சந்தோஷ் நாராயணன் மற்றும் ஸ்வேதா மோகன் இணைந்து பாடியுள்ளனர். கானா பாடலாக உருவாகி இருக்கும் "வாட்டர் பாக்கெட்"சமூகவலைத்தளங்களில்அதிகம்பகிரப்பட்டுவருகிறது. இந்த படம் ஜூன் 13 ஆம் தேதி வெளியாக இருக்கிறது. இந்நிலையில், வாட்டர் பாக்கெட் பாடலுக்கு வரிகள் எழுதிய கானா காதரை இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் மற்றும் நடிகர் தனுஷ் பாராட்டியுள்ளனர்.

இது சம்பந்தமான வீடியோவை ராயன் படக்குழு தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

# சர்வானந்த், கிருத்தி ஷெட்டி நடிக்கும் படத்தின் வெளியீட்டு அப்டேட்

நடிகர் சர்வானந்த், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர். எங்கேயும் எப்போதும் படம் மூலம் தமிழ் ரசிகர்களிடைய பிரபலமானவர். அதன் பிறகு தெலுங்கு படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வந்த சர்வானந்த் 96 படத்தின் ரீமேக்கான ஜானு, ஸ்ரீஹாரம் போன்ற பல படங்களில் நடித்திருந்தார்.

அதைத்தொடர்ந்து இவர் 'கணம்' திரைப்படத்தில் நடித்திருந்தார். கணம் திரைப்படம் விமர்சன ரீதியாக வெற்றி பெற்றாலும் வசூல் ரீதியாக எதிர்பார்த்த அளவில் வெற்றியைத் தரவில்லை. அதேசமயம் நடிகர் சர்வானந்த் மனமே எனும் புதிய படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தை பலே மஞ்சி ரோஜு படத்தின் இயக்குனர் ஸ்ரீராம் ஆதித்யா இயக்கியிருக்கிறார். இதில் சர்வானந்த்துக்கு ஜோடியாக கீருத்தி ஷெட்டி நடித்துள்ளார்.

இந்த படமானது லண்டன் ஐதராபாத், போன்ற பகுதிகளில் படமாக்கப்பட்டது. இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் ஏற்கனவே வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் படத்தின் அடுத்தடுத்த பாடல்களை படக்குழுவினர் வெளியிட்டு வருகின்றனர். முதல் பாடல் வெற்றி பெற்ற நிலையில் படத்தின் அடுத்தப்பாடலான ஓ மனமே பாடலை இன்று மாலை வெளியிடவுள்ளனர். படம் வரும் ஜூன் 7 ஆம் தேதி வெளியாகவுள்ளது.




# முதலமைச்சரை இல்லத் திருமணத்திற்கு நேரில் சென்று அழைத்த அர்ஜூன், தம்பி ராமையா




'ஆக்ஷன் கிங்' என ரசிகர்களால் கொண்டாடப்படும் நடிகர் அர்ஜுனின் மகளும், நடிகையுமான ஐஸ்வர்யாவுக்கும், நடிகர் தம்பி ராமையாவின் மகன், நடிகர் உமாபதிக்கும் கடந்த நவம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. நடிகர் அர்ஜுனுக்கு சொந்தமான ஆஞ்சநேயர் கோவிலில் நண்பர்கள், உறவினர்கள் சூழ எளிமையாக இந்த நிகழ்வு நடந்தது.

அர்ஜுன் தொகுத்து வழங்கிய 'சர்வைவர்' நிகழ்ச்சி மூலம் ஐஸ்வர்யாவுக்கு அறிமுகமானவர் உமாபதி. நிகழ்ச்சியில் உமாபதியின் நற்குணம் அர்ஜுனுக்குப் பிடித்துப் போக தனது வீட்டு மாப்பிளையாக பச்சைக் கொடி காட்டினார்.

உமாபதி அதாகப்பட்டது மகாஜனங்களே, மணியார் குடும்பம், தண்ணி வண்டி, சேரன் இயக்கிய திருமணம் ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். ஐஸ்வர்யாவும் விஷாலுடன் 'பட்டத்து யானை' உள்ளிட்ட சில படங்களில் நடித்திருக்கிறார். திருமணத்திற்குப் பிறகு படங்களில் நடிக்கக் கூடாது என தம்பி ராமையா குடும்பம் கேட்டுக் கொண்டதாக தகவல் பரவியது. ஆனால், இது குறித்து ஐஸ்வர்யா இன்னும் தெளிவுப்படுத்தவில்லை. இவர்களது திருமண நிச்சயதார்த்தம் நடந்து ஆறு மாதங்களான நிலையில் திருமணம் எப்போது என்று ரசிகர்கள் கேட்டு வந்தனர். வரும் ஜூன் 10ம் தேதி கிருகம்பாக்கத்தில் உள்ள அர்ஜுனின் தோட்டத்தில் தான் ஐஸ்வர்யா அர்ஜுன் மற்றும் உமாபதி திருமணம் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில், அரசியல் தலைவர்கள் மற்றும் சினிமா பிரபலங்கள் என பலருக்கும் அழைப்பிதழ் வைக்கும் பணியை அர்ஜுன் ஆரம்பித்துள்ளார். தனது மகள் திருமணத்துக்காக அழைப்பிதழ் வைக்கும் பணியை ஆரம்பித்துள்ள நடிகர் அர்ஜுன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு குடும்பத்துடன் சென்று அழைப்பு விடுத்துள்ள புகைப்படம் தற்போது வெளியாகி இருக்கிறது. தம்பி ராமைய்யாவும் தனது குடும்பத்துடன் உடன் சென்று முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்துள்ளார்.

# அம்பேத்கர் காந்தி குறித்து பேசிய ஜான்வி கபூர்: வைரலாகும் வீடியோ



ஜான்வி கபூர் நடித்துள்ள Mr & Mrs மஹி படத்தின் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

மறைந்த பிரபல நடிகை ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் பாலிவுட்டில் வளர்ந்து வரும் நடிகையாக உள்ளார். அடுத்தடுத்து படங்களில் கமிட்டாகி பிஸியாக நடித்து வரும் ஜான்வி கபூர், கிரிக்கெட்டை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ள மிஸ்டர் அண்ட் மிஸ்சஸ் மாகி (Mr & Mrs Mahi) என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். ராஜ்குமார் ராவ் நடித்துள்ள இந்தப் படம் வரும் மே 31 ஆம் தேதி வெளியீட்டுக்கு தயாராக உள்ளது.

இந்நிலையில், தி லாலன்டோப் சினிமா யூட்யூப் சேனலில் படம் தொடர்பாக ஜான்வி கபூர் பேட்டியளித்தார். அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது.

அந்தப் பேட்டியில் பேசிய ஜான்வி கபூர் தனக்கு வரலாற்றில் அதிக ஆர்வம் இருப்பதாக கூற, உடனே நெறியாளர், 'வரலாற்றின் எந்த காலக்கட்டத்துக்கு செல்ல விரும்புகிறீர்கள்' என்று கேட்கிறார். அதற்கு அவர், "மகாத்மா காந்திக்கும், அம்பேத்கருக்கும் இடையில் 'சாதி' குறித்து அவர்களின் பார்வையையும், கருத்துகளையும், விவாதங்களையும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அம்பேத்கருக்கும் காந்திக்கும் இடையே நடக்கும் விவாதத்தைப் பார்ப்பது சுவாரஸ்யமாக இருக்கும். அவர்களின் சித்தாந்தங்களுக்கு இடையிலான உரையாடலையும், பல்வேறு விஷயங்களில் அவர்கள் கொண்டிருந்த பார்வையையும் அறிந்துகொள்ளலாம்.

சாதி குறித்த தன்னுடைய நிலைப்பாட்டில் தொடக்கத்திலிருந்தே அம்பேத்கர், தெளிவாகவும், கடுமையாகவும் இருந்தார் என நினைக்கிறேன். ஆனால் காந்தியின் பார்வை தொடர்ந்து வளர்ந்து வந்தது என்று நான் நினைக்கிறேன்.

நம் சமூகத்தில் இருக்கும் இந்த சாதிய பிரச்சினை பொறுத்தவரை, மூன்றாவது நபரின் கண்ணோட்டத்திலிருந்து அதை பார்ப்பதற்கும், அந்த வாழ்க்கையை வாழ்வதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது" என்றார்.

அவரிடம், "உங்கள் பள்ளியில் சாதி குறித்து விவாதம் நடக்குமா?" என நெறியாளர் கேட்க, "பள்ளி மட்டுமல்ல, எனது வீட்டிலும் கூட அது தொடர்பான விவாதம் நடந்தது கிடையாது" என்றார்.

ஜான்வி ஒரு நடிகை என்பதை தாண்டி சமூகத்தைப் பற்றிய அவரது பரந்த புரிதல் பெரும்பாலான மக்களை கவர்ந்துள்ளது.

# உலக பாரா தடகளம்: 6 தங்கம் உள்பட 17 பதக்கங்களுடன் 6வேது இடம் பிடித்த இந்தியா




மாற்றுத் திறனாளிகளுக்கான 11வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஜப்பானின் கோபே நகரில் நடைபெற்றது. இதில் 100 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

ஆண்களுக்கான குண்டு எறிதலில் எப்46 பிரிவில் பங்கேற்ற இந்திய வீரர் சச்சின் சர்ஜிராவ் கிலாரி 16.30 மீட்டர் தூரம் எறிந்து புதிய ஆசிய சாதனை படைத்ததுடன், தங்கப்பதக்கம் வென்றார்.

இறுதி நாளான இன்று இந்தியா ஒரு தங்கம் உள்பட 3 பதக்கங்கள் வென்றது. இத்துடன் இந்தியா 6 தங்கம் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இந்திய அணி இதுவரை 17 பதக்கங்கள் (6 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலம்) வென்று பதக்கப்பட்டியலில் 6வது இடம் பிடித்துள்ளது.

உலக பாரா தடகள போட்டி ஒன்றில் இந்தியா கைப்பற்றிய அதிகபட்ச பதக்க எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன் கடந்த ஆண்டு பாரீசில் நடந்த போட்டியில் 10 பதக்கங்கள் (3 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம்) வென்றதே அதிகபட்சமாக இருந்தது. அதனை முந்தி புதிய வரலாறு படைத்துள்ளது.

சீனா 33 தங்கம் உள்பட 87 பதக்கங்களுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. பிரேசில், உஸ்பெகிஸ்தான், கிரேட் பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

# விமானத்தின் எகனாமி கிளாசில் எளிமையாக பயணித்த டோனி: வைரலாகும் வீடியோ



ஐபிஎல் 2024 தொடரிலிருந்து சிஎஸ்கே வெளியேறிய நிலையில் டோனி தற்போது தனது சொந்த ஊரான ராஞ்சியில் ஓய்வெடுத்து வருகிறார். இந்நிலையில் பெங்களூரில் இருந்து ராஞ்சிக்கு விமானத்தின் எகானமி கிளாஸில் டோனி பயணித்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில், தோனி தனது பெட்டியை மேல் உள்ள ரேக்கில் வைத்துவிட்டு தனது இருக்கையில் அமர்ந்திருப்பது பதிவாகியுள்ளது. சக பயணிகள் டோனியை தங்கள் போன் கேமராக்களில் படம்பிடித்து அவரின் எளிமையை கைதட்டி வரவேற்றனர்.

தொடர்ந்து இந்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி வரும் நிலையில், ரசிகர்கள் டோனியின் எளிமையை மெச்சி தங்களது அன்பை வெளிப்படுத்தி வருகின்றனர். பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் வைத்து நடைபெற்ற ஆர்சிபி உடனான ஆட்டத்தில் தோல்விக்கு பின்னர் ஆர்சிபி அணியினருக்கு டோனி கை கொடுக்காமல் மைத்தனத்தில் இருந்து சென்றது சர்ச்சையான நிலையில் அந்த களங்கத்தைப் போக்கும் வகையில் இந்த வீடியோவைப் பகிர்ந்து டோனியின் நற்பண்புகளை ரசிகர்கள் உச்சி முகர்ந்து வருகின்றனர். இதற்கிடையில் 6 ஆம் கட்ட தேர்தலான இன்று ( மே 250 பீகார் மாநிலம் ராஞ்சியில் டோனி வாக்களித்து குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக் கோப்பை: தினேஷ் கார்த்திக்கின் புதிய அவதாரம்




டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற உள்ளது. இதில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. இந்நிலையில், டி20 உலகக் கோப்பை தொடருக்கான வர்ணனையாளர் குழுவை ஐ.சி.சி. நேற்று அறிவித்தது. அதில் ஐ.பி.எல். தொடரில் இருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற பெங்களூரு அணி வீரரான தினேஷ் கார்த்திக் இடம்பெற்றுள்ளார். இது அவரது ரசிகர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பல டி20 உலகக் கோப்பை தொடர்களில் வீரராக களமிறங்கிய அவர், தற்போது வர்ணைனையாளர் என்ற புதிய அவதாரத்துடன் நடப்பு தொடரில் பங்கேற்க உள்ளார். தினேஷ் கார்த்திக் டி20 உலகக் கோப்பை தொடரில் வர்ணனை செய்யப்போவது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.





# மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் பி.வி.சிந்து

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் தொடரின் அரையிறுதி சுற்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, தாய்லாந்தின் பூசானனை எதிர்கொண்டார்.

இதில் உலகத் தரவரிசையில் 15வது இடத்தில் இருக்கும் பி.வி.சிந்து 1321 என முதல் செட்டை இழந்தார். இதையடுத்து, சுதாரித்துக் கொண்ட பி.வி.சிந்து அடுத்த இரு சுற்றுகளை 2116, 2112 என கைப்பற்றியதுடன், இறுதிச்சுற்றுக்கு முன்னேறி அசத்தினார். ஐபிஎல் இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணியும் ஹைதராபாத் அணியும் மோதுகின்றன.

# ஜெனீவா ஓபன் டென்னிஸ்: அரையிறுதியில் கேஸ்பர் ரூட் போராடி வெற்றி



ஜெனீவா ஓபன் டென்னிஸ் தொடர் சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வருகிறது.

இன்று நடந்த அரையிறுதியில் நார்வேயின் கேஸ்பர் ரூட், இத்தாலியின் பிளாவியோ கோபோலியுடன் மோதினார்.

இதில் கேஸ்பர் ரூட் 16 என இழந்தார். இதனால் சுதாரித்துக் கொண்ட ரூட் 61, 76 (74) என்ற செட்கணக்கில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

இன்று மாலை நடைபெறும் இறுதிப்போட்டியில் கேஸ்பர் ரூட், செக் வீரர் தாமசுடன் மோதுகிறார்.



**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**

**இன்னாச்சொ னோற்பாரிற் பின்**

**விளக்கம்:**

உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்கு அடுத்த நிலையில்தான் பெரியவர் ஆவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.